# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
## අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
## அதி விசேஷமானது

අංක 160/3 — 1975 අප්‍රේල් 19 වැනි සෙනසුරාදා — 1975.04.19

160/3 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (50)/75.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

*பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் முதலமைச்சரின் ஆலோசனையின்மீது சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**வி. கொபல்லவ,**
*சனாதிபதி.*

*நுவரெலியா,* 1975, *ஏப்பிறல்* 19.

**1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க அவசரகால (மறியற்சாலைகளிலிருந்து ஆட்களை விடுதலை செய்தல்) ஒழுங்குவிதிகள்**

**ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாதல்.**

1. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள்—

(அ) ஏதேனும் பிற எச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பயனுடையனவாயிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஏதேனும் அவசரகால ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் தவறினைப் புரிந்துள்ளதாகச் சந்தேகிக்கப்பட்ட, குற்றஞ்சாட்டப்பட்ட, அல்லது குற்றவாளியாகக் காணப்பட்ட எந்தவோராளுக்கேனும் அல்லது எந்தவோராள் தொடர்பாகவேனும் ஏற்புடையனவாகாதிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) எந்தவோர் அவசரகால ஒழுங்குவிதியின் கீழும் தடுத்துவைக்கப்பட்டுள்ள எந்தவோராளுக்காயினும் ஏற்புடையனவாகாதிருத்தல் வேண்டும்.

**விளக்கமறியலில் வைத்திருக்கப்படும் ஆட்கள் ஆளுக்குரிய பிணைமுறியின்பேரில் கண்காணிப்பாளரால் விடுவிக்கப்படலாம்.**

2. (1) ஆளொருவர் பிணையில் விடற்பாலதான தவறொன்றுக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு, அத்தகைய ஆள்—

ஒன்றில் (அ) நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்குமிடத்து,

அல்லது (ஆ) பிணைமுறி கொடுக்குமாறு கட்டளையிடப்பட்டும், ஆனால் பிணைமுறியளிக்க அவரால் இயலாமையின் நிமித்தம் அல்லது பிறகாரணத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஆள் அனுமதிக்கப்படும் சிறைச்சாலையின் கண்காணிப்பாளர், தமது தற்றுணிபின்படி,

அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் தோற்றுதற்பொருட்டான, பிணை நிற்போர் அற்ற, ஒரு பிணைமுறியிற் கைச்சாத்திடுதலின்பேரில், அத்தகைய ஆளை எந்நேரமாயினுஞ்சரி, மறியற்சாலையிலிருந்தும் விடுவிக்கலாம்.

(2) பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மறியற்சாலைக் கண்காணிப்பாளரின் தத்துவங்களானவை, செயலாளரின் விசேட, அல்லது பொதுப் பணிப்புரைகளுக்கு அமையப் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

**தண்டனைகளை இடைநிறுத்தலும் குறைத்தலும்.**

3. (1) ஒரு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியல் தண்டனை ஒன்றின் ஒரு பகுதியை ஓராள் அனுபவித்து முடித்துள்ளவிடத்து, செயலாளரானவர்—

ஒன்றில் (அ) அத்தகைய தண்டனையின் இடைநிறுத்தம் ;

அல்லது (ஆ) அத்தகைய தண்டனையின் எஞ்சிய பாகத்தை அல்லது அப்பாகத்தின் பகுதியைக் குறைக்கும்

கட்டளையையிடுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளானவை, மறியல் தண்டனைகளை இடைநிறுத்தல் அல்லது குறைத்தல் தொடர்பான ஏதேனும் பிற எச்சட்டத்தினதும் அல்லது எவரேனும் பிற ஆளினதும் உரிமைகளுடன் சேர்ந்தனவாகுமே தவிர, அதனையோ அவற்றையோ மதிப்புக்குறைப்பன ஆகாதிருத்தல் வேண்டும்.

**பொருள் கோடல்.**

4. இவ்வொழுங்குவிதிகளில்—

ஒரு மறியற்சாலையின் "கண்காணிப்பாளர்" என்பது எவரேனும் உதவிக் கண்காணிப்பாளரையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"செயலாளர்" என்பது நீதி அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.